**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 94/2019 |
| Name | : Anwar |
| P.W. | : 2 |
| Father Name | : Syed Moideen |
| Village | : |
| Taluk | : Madurai |
| Caste | : |
| Calling | : Singer |
| Religion | : |
| Age | : 53/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 15.02.2022

சாட்சி மாற்றுத்திறனாளி என்பதால் Walker உடன் வந்தார் அதனால் சாட்சியை நீதிமன்ற அனுமதியின் பேரில் நாற்காலியில் உட்கார வைத்து சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்பட்டது.

அ.சா. 1 யை தெரியும். இறந்து போன கருப்பையாவை தெரியும். டாடா ஏஸ் வாகனத்தில் சாதகப் பறவை இசைக்குழு என்று பெயர் வைத்து ஊர் ஊராக பாடி வருகிறோம். 21.05.2019 ம் வருடம் மடத்துக்குளத்தில் இருந்து கணியூர் காவல் நிலையம் அருகில் மாலை 6 மணி இருக்கும் அந்த வண்டியில் மலைச்சாமி, நான், அ.சா.1, இறந்து போன கருப்பையா ஆகிய நான்கு பேரும் வந்தோம். அவர் எங்கள் வண்டியில் இருந்து கீழே இறங்கினார். காரத்தொழுவு – கணியூர் செல்லும் தார் ரோட்டில் ரோட்டின் ஸ்கூல்

பக்கம்  ஓரமாக நின்று கொண்டிருந்தார். அப்போது ஒரு இருசக்கர வாகனம் வேகமாக வந்து அவரை அடித்து இழுத்து சென்றது. இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் மது அருந்தி இருந்தார்.  இறந்து போனவருக்கு முகத்தில், வாயில், தலையில் அடிப்பட்டது. இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் சுரேஷ் ஆஜர் எதிரி தான். அவர் நீதிமன்றத்தில் உள்ளார். அவர் ஓட்டி வந்த வாகனம் தெரியாது. இந்த விபத்திற்கு காரணம் ஆஜர் எதிரி தான்.  காயம் பட்ட கருப்பையா அந்த இடத்திலேயே இறந்துவிட்டார். அவரை உடுமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம்.  இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரித்த போது நடந்ததை சொன்னேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 நாகேந்திரன், இறந்து போன கருப்பையா, நான் ஆகியோர் ஒரே குழுவில் வேலை செய்தோம் என்றால் சரிதான். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் நான் தான் அந்த Group  நடத்துகிறேன்.  நான் நிர்வாகம் செய்வதை தவிர பாட்டும் பாடுவேன். எங்களது வாகனம் ஓரமாக நிறுத்தப்பட்டிருந்தது என்றால் சரிதான். நான் வண்டியில் உள்ளே உட்கார்ந்திருந்தேன் என்றால் சரிதான். வண்டியின் பின்னால் சைடில் என்ன நடந்தது என்று எனக்கு உடனே தெரியாது என்றால் சரிதான். சிறிது நேரம் கழித்து தான் தெரிந்தது.  இறந்து போன கருப்பையா எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் நான் பொய் சா ட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.